27-01-2014 Dinathanthi



சென்னை விமான நிலையம் அருகே அமைக்கப்படும் மெட்ரோ ரெயில் நிலையத்தை படத்தில் காணலாம்.

பஸ், ரெயில், விமான பயணிகளுக்காக

# சென்னை விமான நிலையம் அருகில் வானுயர்ந்த மெட்ரோ ரெயில் நிலையம்

## 95 சதவீத கட்டுமான பணிகள் நிறைவு

சென்னை, ஜன.27– பஸ், ரெயில் மற்றும் விமான பயணிகள் நலன் கருதி சென்னை விமான நிலையம் அருகில் அதிநவீன வசதிகளுடன் வானுயர்ந்த மெட்ரோ ரெயில் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

### விமான நிலையத்தில் ரெயில் நிலையம்

சென்னையில் நடந்து வரும் மெட்ரோ ரெயில் சேவைக்காக 32 ரெயில் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் 31 ரெயில் நிலையங்களை மெட்ரோ ரெயில் நிறுவனம் ஒப்பந்தக்காரர்களை நியமித்து பணி செய்து வருகிறது.

விமானநிலைய வளாகத்தில் உள்ள மெட்ரோ ரெயில் நிலையத்தை மட்டும் இந்திய விமான நிலைய ஆணைய குழுமம் ரூ.56 கோடி மதிப்பில் அமைத்து வருகிறது. இதற்கான தொகையை மெட்ரோ ரெயில் நிறுவனம் வழங்கிவிடுகிறது.

31 ரெயில் நிலையங்களும் மெட்ரோ ரெயில் பயணிகளை மையமாக வைத்து அமைக்கப்பட்டு வருகிறது. ஆனால் விமான நிலையத்தில் அமைக்கப்பட்டு வரும் ரெயில் நிலையம் மட்டும் பஸ், ரெயில் மற்றும் விமானபயணிகளை மையமாக வைத்து அமைக்கப்பட்டு வருகிறது.

இதனால் மற்ற ரெயில் நிலையங்களை விட இந்த ரெயில் நிலையம் அதிநவீன வசதிகளுடனும், அதிக பயணிகளை கையாளும் வகையிலும், மிகுந்த பாதுகாப்புடனும் அமைக்கப்பட்டு வருகிறது.

### விமான நிலைய ஆணைய குழுமம்

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிலைய அதிகாரிகள் கூறியதாவது:–

ஜி.எஸ்.டி. சாலையில் உள்ள விமானநிலைய வளாகத்தில் விமானநிலைய மெட்ரோ ரெயில் நிலையம் கட்டுமானப்பணிகளை விமானநிலைய ஆணைய குழுமத்தினர் செய்துவருகின்றனர். விமான நிலையத்தின் புதிய டெர்மினல் அருகில் இந்த ரெயில் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. பஸ், ரெயில் மற்றும் விமான பயணிகள் இந்த ரெயில் நிலையத்தை பயன்படுத்தவிருப்பதால் அதிக வசதியுடன் அமைக்கப்பட்டு வருகிறது.

விமான நிலையத்தின் முன்பகுதியில் மெட்ரோ ரெயில் நிலையம் அமையவிருப்பதால், பயணிகளை கவரும் வகையில் பிற ரெயில் நிலையங்களை விட அதிநவீன வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது. ரெயில்வே நிர்வாகம் மற்றும் போக்குவரத்து போலீசாரின் ஆலோசனைகளும் கேட்கப்பட்டு வருகிறது.

### அதிகாரிகள் ஆலோசனை

அருகில் உள்ள திரிசூலம் ரெயில் நிலையமும் சுரங்கப்பாதை வழியாக விமானநிலைய மெட்ரோ ரெயில் நிலையத்துடன் இணைக்கப்படுகிறது.

இந்தப்பாதையில் அடுத்த ஆண்டு இறுதியில் ரெயில் இயக்கவிருப்பதால் விமானநிலைய அதிகாரிகள் மற்றும் மாநிலத்தின் பல்வேறு துறை அதிகாரிகளிடம் ஆலோசனையும் நடத்தப்படுகிறது. இதில் பெரும்பாலான கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

இதுகுறித்து விமான நிலைய அதிகாரிகள் கூறியதாவது:–

### 5 நிலைகளில் ரெயில் நிலையம்

விமான நிலைய மேம்பாட்டு கருதி விமானநிலைய வளாகத்தில் மெட்ரோ ரெயில் நிலையம் அமைக்கும் பணியை செய்து வருகிறோம். பிறபயணிகளுடன் விமான பயணிகளும் மெட்ரோ ரெயிலை பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்படுகிறது.

5 நிலைகளில் நடந்து வரும் வானுயர்ந்த ரெயில் நிலைய பணியில் முதலாவது தரை மட்டதளம் விமான நிலைய வாகனங்களை நிறுத்துவதற்கும், 2–வது தரைமட்டதளம் மெட்ரோ ரெயில் பயணிகளின் வாகனங்களை நிறுத்துவதற்கும் பயன்படும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

### ஆகாய நடைபாதை

முதல் தளத்தில் மெட்ரோ ரெயில்களுக்கான டிக்கெட் எடுக்கும் கவுண்ட்டர்களும், 2–வது தளத்தில் பிளாட்பாரமும், 3–வது தளத்தில் நவீனரக கூரையும் அமைக்கப்படுகிறது. திரிசூலம் ரெயில் நிலையத்திலிருந்து விமான நிலைய மெட்ரோ ரெயில் நிலையத்திற்கு வரும் பயணிகளுக்காக ஆகாய நடைபாதையும் அமைக்கப்பட்டு வருகிறது.

விமானநிலையம் அருகில் வானுயர்ந்த ரெயில் நிலையமாக இவை அமைக்கப்படும். இதன் கட்டுமானப்பணிகள் 95 சதவீத நிறைவடைந்து உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.